# தங்கங்களே! நாளைத்தலைவர்களே!

**(12.06.2012 அன்று எழுதப்பட்டது)**

“வித்தின்றி விளைக்கும் பரமானந்தத்தின் விளைவே வருக....
பிறவிப்பிணிக்கோர் மருந்தே வருக...
பசுங்குதலை மழலைக் கிளியே வருக....”

என மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழின் வரிகளைப் படிக்கும்போது தளர் நடையிட்டு நீங்கள் நடந்து வர உங்களுக்கு அம்புலி காட்டி உணவு ஊட்டிய, உங்களையே தங்களது உலகமாகக் கொண்ட உங்களது பெற்றோரின் முகம் நினைவுக்கு வருகிறதா? புதுப்பொலிவுடன் பூவைப்போலவும் காலை இளங்கதிர் போலவும் இருக்கும் மாணவர்களே! பள்ளிப் பருவமும் கல்லூரிப்பருவமும் உங்களுக்குக் கொடுக்கும் நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாமல் உங்களில் சிலர் தவறான முடிவுகளைச் செயல்படுத்துவது அதிகரித்துவருவது போல் தோன்றுகிறதே. உங்கள் வாழ்க்கையைச் சற்று எளிதாக ஆக்கிக் கொள்ள ஏதும் வழி இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்க்கலாமா?

ஆசிரியர் திட்டினார் என்றும் காப்பியடித்தபோது பிடித்துவிட்டார்கள் என்றும் காப்பியடிக்க உதவி செய்தபோது பிடித்துவிட்டார்கள் என்றும் பள்ளித்தேர்வில் ஃபெயில் ஆகிவிட்டது என்றும் கல்லூரித்தேர்வில் அரியர்ஸ் வந்துவிட்டது என்றும் கணிதப்பாடம் புரியவில்லை என்றும் பள்ளியில் தமிழ் மீடியத்தில் படித்து விட்டு பொறியியல் அல்லது மருத்துவக் கல்லூரியில் ஆங்கில மீடியத்தில் வகுப்புகளைக் கவனிப்பது கடினமாக இருக்கிறது என்றும் தோழனோ அல்லது தோழியோ பேசவில்லை என்றும் அல்லது தோழன் அல்லது தோழியுடன் நட்புமுறையில் பேசிக்கொண்டிருந்தபோது யாரோ தவறான அர்த்தம் கற்பித்துவிட்டார்கள் என்றும் இன்னும் இது போன்ற குழந்தைத்தனமான பல பிரச்சினைகளுக்கும் அல்லது மாணவப்பருவத்திற்கு ஒத்துவராத காதல் அல்லது திருமணம் போன்ற பிரச்சினைகளே ஏற்பட்டால் கூட தீர்வு தற்கொலையா?

வேறு தீர்வுகளும் இருக்கின்றனவே! 'வருமுன் காப்போம்' என்ற உத்தியைப் பயன்படுத்தி மாணவர்கள் மேற்கூறிய இக்கட்டான சூழ்நிலைகளில் தாம் சென்று சேராதவாறு தம்மைத் தயார் செய்துகொள்ளலாம். அல்லது 'தவறுகள் செய்வது மனித இயல்பு' என்பதை கருத்தில் கொண்டு அத்தகைய சூழ்நிலைகளில் சிக்கும்பொழுது 'எடுத்தோம் கவிழ்த்தோம்' என்று அதிரடி நடவடிக்கைகளில் இறங்காமல் இருக்கலாம்.

பொதுக்கட்டுரைகள் எழுதும் போது நீங்கள் அநேகமாக 'நான் இந்தியப் பிரதமராக இருந்தால் .... ' என்ற கற்பனைக் கட்டுரை எழுதியிருப்பீர்கள். அது போல மேற்கூறிய ஒவ்வொரு சூழ்நிலையிலும் சிக்கி நீங்கள் மனம் வாட நேர்ந்தால் என்ன செய்வீர்கள் என்பதைத் தனித்தனிக் கற்பனைக் கட்டுரைகளாக எழுதிப் பாருங்களேன். நீங்கள் மூளையைக் கசக்கி ஆர அமர யோசித்து அக்கட்டுரைகளை எழுதும்போது 'தற்கொலை செய்து கொள்வேன்' என்றோ 'ஆசிரியரைக் கத்தியால் குத்தி விடுவேன் அல்லது துப்பாக்கி எடுத்து சுட்டுவிடுவேன்' என்றோ நிச்சயம் எழுத மாட்டீர்கள். ஏனென்றால் சிந்திக்கும் நிலையில் இருக்கும் உங்கள் மனதில் உங்களை உயிரினும் மேலாகப் பேணிப் பாதுகாக்கும் உங்களது பெற்றோரின் முகங்கள் தெரியும்; உங்களது உடன்பிறந்தவர்களின் அன்பு முகங்கள் தெரியும்; உங்களது ஆசிரியரை எதிர்பார்த்துக்கொண்டு அவரது வீட்டில் காத்திருப்பவர்களின் முகங்கள் தெரியும்.

வருமுன் காத்துக்கொள்ளும் வகையில் என்னென்ன செய்யலாம்?
வகுப்பில் கவனச் சிதறல் இல்லாமல் பாடத்தைக் கவனிக்கலாம். கணிதப் பாடம் மற்றும் இலக்கணப்பாடங்களைக் மிகவும் கூடுதல் கவனத்துடன் உன்னிப்பாகக் கவனிக்கலாம். 'அகல உழுவதை விட ஆழ உழுவதே மேல்' என்பதையும் 'நுனிப்புல் மேயாதே' என்பதையும் படிப்பதற்கான உத்திகளாக வைத்துக்கொள்ளலாம். படித்ததை எழுதிப் பார்க்கலாம். கற்றவற்றை வாழ்வில் நடைமுறைப்படுத்தலாம். அன்றாடம் செய்தித் தாள்கள் படிப்பதை வழக்கமாகக் கொள்ளலாம். உங்களது மதத்தைச் சேர்ந்த பிரசங்கங்களும் காவியச் சொற்பொழிவுகளும் தொலைக்காட்சியிலோ அல்லது வீட்டின் அருகாமையிலோ நடக்கும்போது

வீட்டுப் பெரியவர்களுடன் அமர்ந்து அவற்றைக் கவனித்து நீதிக் கருத்துக்களைக் கேட்டுப் பரவசப்படலாம். ‘நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம்’ என்றும் ‘நமக்கென்று பூமியிலே கடமைகள் உண்டு – அதை நமக்காக நம் கையால் செய்வது நன்று’ என்றும் ‘ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது’ என்றும் எவ்வளவோ திரைப்படப்பாடல்கள் ஆழமான கருத்துகளை எளிதாகக் கூறுகின்றன.